இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O 197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 135 இதழ்: 14 பக்கங்கள்: 08 திகதி: 17-07-2011 விலை: 15.00

# மாணவர் உருவாக்கத்தில் குடும்பமும், பாடசாலையுமே அடிப்படை அலகுகள்

**- புனித பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் ஞா. பிலேந்திரன் அடிகள் -**



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா ஆடி 13ம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இப்பரிசளிப்பு விழாவின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகக் கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத் துறைத் தலைவர் பேராசிரியர் ஞானமுத்து பிலேந்திரன் அடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் கல்வியின் முக்கிய நோக்கம் ஒருவரின் முழுமனித உருவாக்கமே! மாணவர்களின் அறிவுத்திறன் வளர்ச்சி, மற்றும் சமச்சீரான சிந்தனைப் போக்கு என்பன கல்விச் செயற்பாடுகளினாலேயே ஏற்படுத்தப்படுகின்றன.

தற்கால மாணவர்களின் நன்நடத்தை குறித்துப் பெற்றோர், பெரியோர், ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

30 வருடப்போர் பல தமிழர் பாரம்பரிய விழுமியங்களை அழித்து ஒழித்து விட்டது. குறிப்பாகப் பெரியோரை மதித்தல், சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக ஒழுகுதல், ஒழுக்கவியலுக்கும், சமய காரியங்களுக்கும் மதிபபு கொடுத்தல் போன்றவை அருகிப் போய்விட்டன.



மேலும் நவீன தொழில்நுட்பசாதனங்களாகிய தொலைக்காட்சி, கணனி, இணையம், அலைபேசி (Mobile) போன்றவை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வடமராட்சி கிழக்குக் கரையோரக் கிராம மக்கள் மீள்குடியமர்வு

**– இல்லிடவசதி, குடிநீர்வசதி இன்றித் தவிப்பு –**

கடந்த போரினால் இடம்பெயர்ந்து, செட்டிகுளம், இராமாவில் போன்ற இடங்களில் தங்கியிருந்த பெரும் தொகையான வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்கள், குறிப்பாக, கட்டைக்காடு, வெற்றிலக்கேணி, கோவில் போக்கறுப்பு, குடாரப்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடந்த 3ம், 4ம் திகதிகளில் மீளகுடியமர்ந்தப்பட்டனர். பல வருடங்களாக முகாம்களில், நலம்புரி நிலையங்களில் காத்திருந்த மக்கள் தமக்கு விடிவும், சுதந்திரமும், கிடைத்து விட்டது என்ற மனமகிழ்ச்சியில் தம் சொந்தக் கிராமாத்திற்குச் சென்றனர். பல வசதிக் குறைவுகளுடன் மீளகுடியமர்த்தப்பட்ட இம்மக்கள் குடியிருக்க இல்லிடம் அற்றவர்களாகவும், தாகம் தணிக்கக் குடிநீர் இல்லாதவர்களாகவும் பல துன்பங்களைச் சுமந்து தமது வாழ்வாதார, பொருளாதார உதவிகளை வேண்டிக் காத்திருக்கின்றனர். இம்மக்களின் வாழ்க்கைதரத்தை உயர்த்தி,அடிப்படை வசதிகளை வழங்க; அரச, அரசசாாபற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் எனக் கிராமவாசி ஒருவர் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.



வடமராட்சி கிழக்கு மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்குச் சென்ற யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை; மீள்குடியேற்ற மக்களின் அவல நிலைகளை கேட்டு அறிந்து கொண்டதுடன், இப்பிரதேசங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க ஆலயங்களையும் பார்வையிட்டார்.

## மன்னார் இசைக்குழுவினரால் யாழில் நற்செய்தி அறிவிப்புப் பெருவிழா

அமலமரித் தியாகிகளின் மறையுரைஞர் குழுமத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மகா ஞானவொடுக்கத்தின் ஓர் அங்கமாக; மன்னார் பள்ளிமுனை 'சங்கமம்' இசைக்குழுவினர், யாழ் இசைக்கலைஞர்களோடு இணைந்து ஆனிமாதம் 24ம் திகதி மாலை 6.00 மணிக்குக் குருநகர் கலையரங்கில் நற்செய்தி அறிவிபபுப் பெருவிழாவில் ''இசையில் இறைவன்'' என்ற மையப்பொருளில் புதுப்பித்தல் நிகழ்வினை மேற்கொண்டனர்.

முதன் முறையாக மன்னார், யாழ் இசைகலைஞர்கள் இணைந்து நற்செய்தி அறிவிப்புப் பணியை அமலமரித்தியாகிகளின் மறையுரைஞர் குழுமத்தோடு இணைந்து நற்செய்தி, பாடல்கள் ஊடாக இரண்டு மணித்தியாலங்கள் இறைமக்களை ஆன்மீகப் புதுப்பித்தலுக்கு குறிப்பாக ''யேசுவில் மீண்டும் எழுவோம்'' என்ற அடித்தளத்தில் நெறிப்படுத்தினார்கள். இப்புதுப்பித்தல் நிகழ்வில் குருநகர்ப் பங்கைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கலந்துகொணடதுடன். மகா ஞானவொடுக்கத்தின் மூலம் தொடர்ந்தும் தங்கள் வாழ்வைப் புதுப்பிக்கும் செயறபாடுகளில் இணைந்து பயன் பெற்று வருகின்றனர்.

நற்செய்தி அறிவிப்புப் பெருவிழாவை, அருட்பணி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி. அவர்கள் நெறிப்படுத்தி; இசையின் மூலமாக நற்செய்தி அறிவிப்பின் ஊடாக, ஆன்மீக எழுச்சிக்கு இட்டுச் சென்றது, குறிப்பிடததக்கது. மன்னார் பள்ளிமுனை 'சங்கமம்' இசைக்குழுவினர் ஏறகனவே மன்னார் மறைமாவட்டத்தில் பல பங்குகளில் இந்நிகழ்வுகளை நடாத்தியவர்கள் என்பதும் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்

## மும்பைக் குண்டு வெடிப்புத் தாக்குதல் குறித்து இந்திய கிறிஸ்தவ அவை கண்டனம்

அப்பாவிப் பொது மக்களைத் தாக்கியதற்கான எந்தக் காரணமும் நியாயப்படுத்தப்பட முடியாதது என, அண்மைக் குண்டு வெடிப்புத் தாக்குதல் குறித்த தன் கண்டனத்தை வெளியிட்டுள்ளார் அனைத்திந்திய கிறிஸ்தவ அவையின் பொதுச்செயலாளர் ஜான் தயாள்.

தீவிரவாதிகள் ஒருநாளும் மனித குலத்தின் நண்பர்களாக இருக்கமுடியாது என்ற அவர், இதில் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் கிறிஸ்தவர்கள் தங்கள் செபங்களை ஒப்புக்கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

காவல்துறையும், பாதுகாப்புத்துறையும் இத்தாக்குதல்களுக்கான மூலத்தை ஆராய்ந்து உண்மைகளை வெளிக்கொணர்வதுடன், பகை உணர்வுகள் மேலோங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார் ஜான் தயாள்.

இதற்கிடையே உலகின் பல வேறு நாடுகளின் அரசுத் தலைவர்களும் இத்தாக்குதல்கள் குறித்து தங்கள் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். இலங்கை அரசும் இத்தாக்குதல் குறித்துக் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## புலோப்பளைப் பங்கில் மகிழ்வூட்டு நிகழ்வுகள்

புலோப்பளை இராயப்பர் ஆலயத்திருவிழா யூன் 29ம் திகதி அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று மாலை இரண்டு மணியளவில் பங்கு மக்களுக்கான மகிழ்வூட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் பொருத்தமான பல விளையாட்டுக்கள் போட்டி வடிவில் இடம் பெற்றன. அன்பியங்களுக்கிடையே கயிறு இழுத்தல் போட்டியும் நடைபெற்றது. இவ்வாறு இடம்பெற்ற பல்வேறு பாரம்பரிய மகிழ்வூட்டும் விளையாட்டுக்களைத் தொடர்ந்து மாலை 7.00 மணியளவில் சிறார்களின் நடனம், பரிசளிப்பு நிகழ்வு போன்றவற்றோடு, யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 'விடியல்' இசைக்குழு வழங்கும் இசைமாலை நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வு யாழ் மறைமா்வட்டத்தின் பல்வேறு பங்குகளில் மக்களின் மிகுந்த பாராட்டைப் பெற்று நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

போர்க்காலத்தில் பல இழப்புக்களைச் சந்தித்து இப்பொழுது மீண்டும் புதுப்பொலிவு பெற்று வரும் இவ்வாலயத் திருச்சபையினருக்கு மேற்படி மகிழ்வூட்டு நிகழ்வுகள் மிகவும் ஆனந்தம் தருவதாக அமைந்திருப்பதாகப் பங்கு மக்கள் தெரிவித்தனர். அருட்பணியாளர்கள் பத்திநாதர், யஸ்ரீன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வுகள் பங்குகளில் திரு விழாக்களை அர்த்தமுள்ள வகையில் எவ்வாறு சிறப்பிக்கலாம் என்பதற்கு முன்னுதாரணமாக அமைந்திருந்ததும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதே.

## ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# உள்ளூராட்சி தேர்தல் 2011 ?

நாட்டின் சகல பகுதிகளிலும் நடாத்தப்படாது ஒத்தி வைக் கப்பட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடைபெறப்போகின்றது. யாழ் மாநாகர சபை உட்பட 67 உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கான பிரசாரங் கள் மக்கள் மத்தியில் சூடுபிடித்துள்ளன.

குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இடம் பெறவுள்ள தேர்தல் குறித்து, சகல தரப்பும் உன்னிப்பாக அவதானித்து வரு கின்றன. உள்ளூராட்சிச் சபைகள் என்பது நகரங்களில், கிராமங் களில் உள்ள வளங்களை கொண்டு சிறிய அளவு வேலைத் திட்டங்களை மேற்கொள்வதாகக் கொள்ளலாம்.

உள்ளூராட்சிச் சபைகளைக் குட்டி அரசாங்கம் என்றும் அரசியல் விஞ்ஞான ஆய்வாளர்கள் கூறுவார்கள். ஏனெனில் அதற்கு ஒரு வகையான அதிகாரம் உண்டு. அது மட்டுமல்ல கிரா மிய மட்டங்களில் இருக்கும் பலர் அரசியல் பயிற்சிகளைப் பெறு வதற்கான ஒரு களமாகவும், பங்கேற்பு ஜனநாயகம் எது என்பதை மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு தளமாகவும் இந்த உள்ளூராட் சிச் சபைகளைக் காணலாம்.

சர்வதேச நாடுகளில் தேசிய அரசியலில் ஈடுபடும் அரசியல் வாதிகளை விட உள்ளூராட்சிச் சபைகளிற் போட்டியிட்டு வெற்றி பெற்று அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு மதிப்பு அதிகமாக இருக்கும்.

ஏனெனில் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் நேரடியாக மக்களுடன் தொடர்புகளைப் பேண முடியும். மக்கள் அன்றாடம் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கண்டு கொள்ள முடியும். அதனால்தான் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களின் பதவிநிலை முக்கியமானது.

ஆகவே மக்கள் வாக்களிப்பின்போது சரியானவர்களைத் தெரிவுசெய்யவேண்டும். எந்த அரசியற் கட்சிக்கும் அல்லது போட்டி யிடும் வேட்பாளர்களில் விருப்பமானவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை மக்களுக்கு உண்டு. இன்னாருக்கு அல்லது இந்தக் கட் சிக்கு வாக்களியுங்கள் என்று யாரும் எவரையும் கட்டாயப்படுத்த முடியாது.

ஆயினும் வேட்பாளருக்கான உங்கள் விருப்பு வாக்குகளை வழங்கும்போது மனிதநேயமுள்ள, நேர்மையான, சமூகத்திற்கு தன்னலமற்ற சேவை செய்பவராக உங்களுக்கு நன்கு தெரியும் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். அப்போது தான் எதிர்கால அரசியலுக்கு நல்ல தலைவர்களை அறிமுகம் செய்யும் கடமையை நீங்கள் நிறைவேற்ற முடியும்.

எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்க விருப்பம் இல்லை யானால் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்குச்சீட்டை நிரா கரிக்கும் வகையில் வாக்களிக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் வாக்களிக்காமல் தவிர்ப்பது ஜனநாயக உரி மையைத் துஸ்பிரயோம் செய்வதாக அமைந்துவிடும். ஏனெனில் மக்களின் தெரிவும் மக்களின் விருப்பமும் தேர்தல் மூலமாக வெளிப் படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் அரசியலில் ஈடுபடுவோரை அல்லது கட்சிகளை மக்கள் திருத்த முடியும்.

நான்கு ஆண்டு ஆட்சிக்கால எல்லையைக் கொண்ட உள்ளூராட்சிச் சபைகளில் உறுப்புரிமை பெறுபவர்கள் தங்கள் பதவிக் காலத்தில் மக்களுக்குச் செய்த சேவைகள் என்ன என்ப தைத் தேர்தல் முடிவுகள் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். குறிப்பிட்ட உறுப் பினர்கள் அல்லது குறிப்பிட்ட சில கட்சிகள் மீண்டும் தெரிவாகி யிருந்தால் அவர்கள் தங்களுக்குரிய பதவிக்காலத்தில் சிறப்பான சேவையாற்றியுள்ளனர் என்றும் பொருள்படும்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்ட பின்னர் நடாத்தப்படும் இந்தத் தேர்தல் ஜனநாயகச் சூழலில் நடை பெறுகின்றது என்பதை வெளிப்படுத்த வன்முறைகளை, அச்சுறுத் தல்களைத் தவீர்க்க வேண்டிய பொறுப்பும் அரசியற் கட்சிகளுக்கு உண்டு என்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்

# துறவியின் உலக சாதனை

அடைபட்ட துறவு வாழவில் 84 வருடங்கள் வாழ்ந்து வரும் ஓர் அருட் சகோதரி, இத்தகைய துறவு வாழ்க்கையில் அதிகமான ஆண்டுகள் வாழ்ந்து உலக சாதனை படைத் துள்ளார். இஸ்பெயினி லுள்ள அடைபட்ட துறவு இல்லத்தில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் பிறந்த அதே நாளில் சேர்ந்த அருட்சகோதரி தெரேசா, துறவு வாழ்வில் 84 ஆண்டு கள் வாழ்ந்துள்ளார், தற் சமயம் அச்சகோதரிக்கு வயது 103 ஆகும்.

தனது இத்தனை ஆண்டு துறவு வாழ்வு பற்றிய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட அருட்சகோதரி தெரேசா, இவ்வாழ்க்கையில் தான் பெற்ற மிகப்பெரும் கொடை செபம் என்று தெரிவித்துள் ளார்.

வலேரியா என்ற இயற் பெயரைக் கொண்ட அருட்சகோதரி தெரேசா, 1927ம் ஆண்டு ஏப்ரல் 16ம் திகதி துறவு சபையில் சேர்ந்தார்.

# திருத்தந்தை விடுமுறையில்

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் செபித்தல், வாசித்தல், புத்தகங்கள் எழுதுதல் ஆகியவற்றில் தனது கோடை விடுமுறை யைச் செலவழிக்கத் திட் மிட்டுள்ளார் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

பாப்பிறைகளின் கோடை விடுமுறை இல் லம் அமைந்திருக்கும் காஸ்தெல் கண்டோல் போவுக்கு இவ்வாரம் சென்ற திருத்தந்தை, அங்கு கூடியிருந்த மக் களிடம், "மலைகளும் ஏரி யும் கடலும், அழகான ஆல யமும், நல்ல மக்களும் நிறைந்த இவ்விடத்தில் விடுமுறை நாட்களைச் செலவிட வந்திருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்" என்றார்.

இறைவன் நல்ல விடுமுறை நாட்களைத் தருவாராக என்று அம்மக் களிடம் தெரிவித்தார் திருததந்தை. திருத்தந் தையின் இவ்விடுமுறை குறித்து நிருபர்களிடம் பேசிய திருப்பீடப் பேச் சாளர் இயேசு சபை அருட் பணி பெதரிக் கோலொம் பார்தி, திருத்தந்தை ஓய் வெடுப்பதற்குச் சிறந்த வழியாக, அவர் தனக்கு மிகவும் பிடித்த இறை யியல் மற்றும் திருமறை நூல்கள் பற்றி வாசிப் பதையும் எழுதுவதையுமே கொண்டுள்ளார் என்று கூறினார்.

நாசரேத்தூர் இயேசு பற்றிய திருத்தந் தையின் இரண்டு நூல் களின் தொடர்ச்சியாக, இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றி இவ்விடு முறை நாட்களில் அவர் எழுதுவார் என்றும் அருட் தந்தை லொம் பார்தி கூறினார்.

காஸ்தெல் கண் டோல்போ, உரோமைக்குத் தென் கிழக்கே 15 மைல் தூரத்தில் அல்பானோ ஏரியை நோக்கிய குன்றின் மேலுள்ள அழகிய ஊராகும்

# ஐரோப்பாவில் தற்கொலை அதிகரிபபு - நிதி பிரச்சனையே காரணமாம்.

ஐரோப்பாவில் வேலை வாய்ப்பின்மை, மற்றும் வருவாய்க் குறை வுப் பிரசசனைகளால் தற் கொலை செய்து கொள் வோரின் எண்ணிக்கை 2007ல் இருந்ததைவிட 2009ல் அதிகரித்திருப்பதாக ஆய்வாளர்கள் கடந்த வாரம் கூறினர்.

நிதி நெருக்கடி யால் அதிகமாகப் பாதிக் கபபட்ட நாடுகளாக, கிரேக் கத்தையும் அயர்லாந் தையும் குறிப்பிடும் அவ் வாய்வாளர்கள், 2007க்கும் 2009க்கும் இடைப்பட்ட காலத்தில் சாலை விபத் துக்கள் குறைநதுள்ளன என்றும் கூறினர். வாகனங் களைப் பயன்படுத்தி யோரின் எண்ணிக்கைக் குறைவே இதற்குக் கார ணமாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்கொலை விகி தம், கிரேக்கத்தில் 17 வீதமும் அயர்லாந்தில் 13 வீதமும் அதிகரித்ததாகவும் பத்து ஐரோப்பிய நாடு களில் எடுத்த ஆய்வு தெரி விக்கிறது.

# குழந்தைகள் மறைக்கல்வியில் பெற்றோர் கவனம் வேண்டும்

கத்தோலிக்கப் பெற்றோர் தங்கள் குழந் தைகளுக்கு மறைக்கல்வி வழங்குவதில் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதன் மூலம் குழந்தைகள் தங்கள் வாழ்கையின் பல்வேறு நிலைகளில் உறுதியான விசுவாசப் பயணத்தை மேற்கொள்ள முடியும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட கேட்டுக் கொண் டார்.

இந்த ஒரு பணி யில், முதலில் பெற்றோர் விசுவாசத்திற்குச் சாட்சி களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திய திருத் தந்தை, பிள்ளைகளை வளர்ப்பதில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைக் கண்டு பெற்றோர் பயப்படக் கூடாது என்றும் கூறினார். பிள்ளை களுக்குக் கிறிஸ்தவக் கல்வி வழங்கும் முக்கிய பொறுப்பு குடும்பங்களுக்கு உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டினார் திருத் தந்தை.

தனக்கு மட்டுமே வாழ்தல், நுகர்வுத்தன்மை, பொறுப்புக்களிலிருந்து விலகியிருக்கும் போக்கு போன்ற இக்காலத்திய போக்குகள், பல குழப்பங் களை ஏற்படுத்துகின்றன, ஆனால் கிறிஸ்தவச் சமூ கங்கள் எப்போதும் தகுந்த விசுவாசப் பாதைகளைத் தேர்ந்து கொள்ளுமாறு வலி யுறுத்தினார் திருத்தந்தை.

# புகைப்பிடிப்பதன் காரணமாக மாதந்தோறும் 7875 பேர் உயிரிழப்பு

மது மற்றும் புகைப் பழக்கத்தினால் ஒவ்வொரு மாதமும் ஏறத்தாழ 7875 பேர் இலங்கையில் உயி ரிழப்பதாக நலத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாரடைப்பு மற் றும் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு பலர் உயி ரிழப்பதாக அவர் கூறினார்.

பல்வேறு கார ணங்களுக்காக நாள் தோறும் 950 பேர் இலங் கையில் உயிரிழப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, "போதைக்கு முற்றுப் புள்ளி" என்ற திட்டத்தை அரசாங்கம் எடுத்து நடத்து கின்ற போதிலும், அதிக மானவர்கள் மது மற்றும் புகைப்பழக்கத்திற்கு அடி மையாகி வருவதாகக் கவலையையும் வெளி யிட்டார்.

# ஊடகத் துறைக்கு புதிய சொற்களை அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் - சிவத்தம்பி

அருட்பணி. எஸ்.ஏ. றொஷான்

இலங்கையிலும் சர்வ தேச நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட பேரறிஞர் பேராசிரியர் கார்திகேசு சிவத்தம்பியின் மறைவு தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல தமிழ் பேசும் சமூகத்துக்கும் பேரிழப்பு என இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பேராசிரியர் சிவத்தம்பி பல்கலைக்கழகம் என்ற வரையறைகளைத் தாண்டி சகலருடனும் எளிமையாகப் பழகும் ஒரு நண்பர். கத்தோலிக்க திருச்சபையினருடன் நெருங்கிய தொடர்பாடலையும் உறவு நிலையையும் வளர்த்த ஓர் அன்பர்.

ஆனால் தமிழ் ஊடகத் துறையினருடன் அவருக்கு இருந்த நெருக்கம் வெறுமனே நட்பு மாத்திரம் அல்ல தமிழ் ஊடகத்துறையின் மொழி நடை முறைகள் வாக்கிய அமைப்புகள் போன்றவற்றில் திருத்தங்களை- புதிய சொற்பரிமாணங்களை சொல்லிக் கொடுக்கும் ஆசான் என்ற அந்தஸ்த்தில் அந்த உறவு விளங்கியது.

பத்திரிகை ஆசிரிய பீடத்தில் பயன்படுத்தப்படுகின்ற உதவி ஆசிரியர் என்ற சொல்லுக்கு செம்மைப்படுத்துனர் என்ற தமிழ் சொல்லை பேராசிரியர் சிவத்தம்பி அறிமுகப்படுத்தினார்.

ஏனெனில் உதவி ஆசிரியர், பிரதம ஆசிரியருக்கு அல்லது செய்தி ஆசிரியருக்கு வெறுமனே உதவியாக மாத்திரம் இருப்பவர் அல்ல என்பது பேராசிரியர் சிவத்தம்பியின் வாதம். உதவி ஆசிரியர் என்று குறிப்பிடப்படுபவர் செய்திகளைக் கட்டுரைகளை சரியாக திருத்தம் செய்து செம்மைப்படுத்துகின்றார். ஆகவே அவரை ஆசிரியரின் உதவியாளனாகக் கருத முடியாது.

எனவேதான் உதவி ஆசிரியர் என்ற சொற்பதத்தை நீக்கி செம்மைபடுத்துனர் என்று கூற வேண்டும் என்ற புதிய சொல்லை பேராசிரியர் உருவகப்படுத்தினார். அத்துடன் கொப்பி எடிற்றிங் (Copy Editing) என்ற ஆங்கில சொல்லுக்கு தமிழில் செம்மைப் படுத்தல் என்று கூற வேண்டும் என்பதும் அவரின் புதிய சொல் வடிவமாகும்.

கொழும்பு இதழியல் கல்லூரியினால் வெளியிடப்பட்ட ஊடகத்துறை தொடர்பான நூல் ஒன்றுக்கு பேராசிரியர் சிவத்தம்பி முன்னுரை எழுதியுள்ளார். அந்த முன்னுரையில் ஊடகத் துறையின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது தொடர்பாக அவர் விளக்குகின்றார்.

ஏதேனும் ஒரு துறையில் யாரேனும் முக்கியமான பங்களிப்பு செய்தால் அல்லது வரலாற்று ரீதியாக ஒன்றை குறிப்பிடுவதாக இருந்தால் அதனை வகிபாகம் என்று கூறுதல் பொருந்தும் என்பது பேராசிரியர் சிவத்தம்பியின் மற்றுமொரு சொல் உருவாக்கமாகும்.

இந்த வகிபாகம் என்ற சொல்லை ஊடகவியலாளர்கள் உட்பட தற்போது சகல துறையினரும் பயன்படுத்துகின்றனர்.

ஆகவே வேகமாக மாற்றமைடந்து வரும் நவீன உலகின் போக்குக்கு எற்ப தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு பேராசிரியர் சிவதம்பியின் மொழி ஆளுமை பேருதவியாக இருந்த ஒரு காலகட்டத்தில் அவருடைய மறைவை தமிழ் ஊடகத்துறையினரால் ஏற்க முடியாமல் உள்ளது.

எவ்வாறாயினும் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் இறப்பு உண்டு என்ற நியதிக்கு ஏதுவாக பேராசிரியர் மறைந்தாலும் அவர் உருவாக்கிய பல புதிய தமிழ் சொற்கள் அவருடைய படைப்புக்கள் எம்மத்தியில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்ற திருப்தியுடன் அவர் வழி தமிழ் வளர்ப்போம்.

# குழந்தைகளின் எதிர்கால வாழ்வைச் சீரழிக்கும் தொலைக்காட்சி - ஆய்வில் தகவல்

தொலைக்காட்சியில் வரும் வன்முறை நிகழ்ச்சிகளை குழந்தைகள் பார்ப்பதால், அவர்களின் தூக்கம் கெடுகிறது மற்றும் எதிர்கால வாழ்க்கையில் உடல் பருமன், பாடசாலை செல்லாமை போன்ற மோசமான விளைவுகளும் ஏற்படுகிறது என அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அமெரிக்காவில் உளள சியாட்டில் குழந்தைகள் ஆய்வு நிறுவனம் மூன்று முதல் ஐந்து வயதுள்ள 600 குழந்தைகளையும், அவர்களது பெற்றோரையும் ஆய்வுக்கு எடுத்து, அது குறித்த வெளியிட்டுள்ள முடிவில், வளரும் குழந்தைகளின் தூககத்தைப் பாதிப்பதில் தொலைககாட்சி நிகழ்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன எனவும, கேலிச்சித்திரங்கள், நேரடி ஒளிப்பரப்புகள், குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளிலேயே பெரும்பாலும் வன்முறையைத் தூண்டும் நிகழ்ச்சிகள் ஒளிப்பரப்பாகின்றன எனவும் கூறியுள்ளது. எவ்வளவு நேரம் குழந்தைகள் தொலைக்காட்சி பார்க்கின்றனர், மற்றும் அதில் எவ்வளவு நேரம் வன்முறை நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன என்பது குறித்தும் பெற்றோர் குறைவான மதிப்பீடு செய்கின்றர் என்கிறார் இதில் கலந்து கொண்ட ஆய்வாளர் மைக்கெல் காரிசன். பொதுவாக காட்டப்படும் நிகழ்ச்சிகளில் எது உண்மையானது, எது உண்மை இல்லாதது என்பது குறித்து குழந்தைகளால் புரிந்துகொள்ள முடியாது எனவே இரவு நேரங்களில் வன்முறையைத் தூண்டும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை குழந்தைகளுடன் சேர்ந்து பெற்றோர் பார்ப்பதைத் தவிர்ப்பது நல்லது'' என்று எச்சிரித்துள்ளார் மியாமி மருத்துவ பல்கலைக்கழத்தைச் சேர்ந்த குழந்தைகள் நலமருத்துவர் நீனா மாலிக்.

# ஆப்ரிக்காவில் உணவு நெருக்கடி - உதவி வேண்டி CAFOD அறிவிப்பு

கிழக்கு ஆப்ரிக்காவில் மழையும் தானிய உற்பத்தியும் குறைந்து, கால்நடைகள் பெருமளவில் உயிரிழந்து, மக்கள் உணவு தேடி பல நூறு மைல்கள் அலையும் இன்றைய நிலைகளை மாற்ற உடனடி உதவிகள் தேவைப்படுவதாக அறிவித்துள்ளது கத்தோலிக்க உதவி நிறுவனமான CAFOD அமைப்பு.

காலம் கடந்து போவதற்கு முன்னர் உதவிகள் வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள இப் பிறரன்பு அமைப்பு, ஏற்கனவே. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கான உணவு மையங்கள் அமைத்தல், கிணறு வெட்டுதல், நீர் சேமிப்பு, வறட்சியையும் தாண்டி பலன் கொடுக்கும் பயிர்களுக்கான விதைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறுகிறது.

இதற்கிடையே, உணவு நெருக்கடியால் பல இலட்சக் கணக்கான ஆப்ரிக்கர்கள் துன்புறும் இவ்வேளையில், உலகிலுள்ள அனைத்து நல்மனதுடையோரின் கவனத்திற்கும் அழைப்பு விடுத்துள்ளார் தென் கென்ய ஆயர் பீட்டர் கிஹாரா.

# காவலன் கண்மணிகள்



அன்புத் தம்பி, தங்கையரே!

நீண்ட பெரும் இடைவெளியின் பின் உங்கள் நலன் கருதி "காவலன் கண்மணிகளை" பாதுகாவலன் பத்திகையில் மீண்டும் அறிமுகப்படுத் துகின்றோம். உங்கள் எழுத்தாற்றலை வெளிக்கொணர உங்கள் ஆக்கங்களை கவிதைகள், சிறுகதைகள், சிந்தனைத்துளிகள், நகைச் சுவை விருந்தென எழுதி அனுப்பினால் தரங்கண்டு இப் பகுதியில் பிரசுரிப்போம். மேலும் நீங்கள் அங்கத்தவர்களாக இணைந்து இப்பகுதியில் தொடர்ச்சியான உங்கள் பங்களிப்பையும் வழங்கி வரலாம். இச் சிறுவர் பகுதியில் அங்கத்தவர்களாக இணைய உங்கள் முழுப் பெயர், பாடசாலையின் பெயர், முகவரி, வயது, தரம், என்பவற்றைக் குறிப்பிட்டு உங்களின் அதிபர் அல்லது பங்குத்தந்தையின் மேலொப்பத்துடன் அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
"காவலன் கண்மணிகள்", ஆசிரியர் - பாதுகாவலன்
தபால் பெட்டி இலக்கம் - 02, யாழ்ப்பாணம்.

*ஆசிரியர்.*

# "ஆசையா? தேவையா?"

மி. நொயல்

நம் நகரங்களில் இப்போதெல்லாம் அம்மா, அப்பா தவிர எல்லாப் பொருள்களையும் ஒரே இடத்தில் தரக்கூடிய மிகப் பெரிய கடைகள் எக்கச் சக்கமாக வந்துகொண்டிருக்கின்றன! காய், கறி தொடங்கிக் கார்கள் வரை எதை வேண்டுமானால் ஒரே கடை யில் நாம் வாங்கிவிட முடியும்!

ஒரு பெரிய மனிதர் அத்தகைய ஒரு கடைக்குத் தினமும் சென்றார்! ஒவ்வொரு பொருளையும் கவனமாகப் பார்த்தார்! ரசித்துச் சிரித்தபடி திரும்பினார்!

இவரைத் தினமும் கவனித்துக்கொண்டிருந்த கடைப் பணிப்பெண்ணுக்கு ஒரு சந்தேகம்! அவரிடம் ஒரு நாள் தயங்கியபடியே கேட்டாள்!

"ஐயா! தினமும் கடைக்கு வருகிறீர்கள்! அக்கறையோடும் மகிழ்ச்சியோடும் பொருள்களைப் பார்க்கிறீர்கள்! எதையும் வாங்குவதில்லையே! ஏன்?"




பெரியவர் சிரித்தபடி சொன்னார்.

"நான் இந்தப் பொருள்கள் ஒவ்வொன்றையும் பார்க்கும் போது, இந்தத் தேவையில்லாத பொருள்களை எல்லாம் நான் வாங்கவில்லையே என்று நினைத்து மகிழ்கிறேன்! அந்த மகிழ்ச்சிக்காகவே கடைக்கு வருகிறேன்"

இது சந்தைக்களம்! சந்தைக் காலம்!

எல்லாம் கிடைக்கிறது! கிடைப்பதற்கெல்லாம் ஆசைப் படலாமா?

ஆசைப்படுவதை எல்லாம் வாங்கிவிடலாமா? அதற்காகத் தொடர்ந்து கடன் சுமையை ஏற்றிக்கொள்ளலாமா?

வாங்குகிற ஒரு நாளில் சுகம்! அதற்கடுத்து எத்தனை நாள் சோகம்!

பொருள்களை வாங்க ஆசைப்படுவது தவறில்லை!

ஆனால் நாம் வாங்கப் போகும் பொருள் நமக்குத் தேவைதானா என்று யோசித்துவிட்டு ஆசைப்படலாமே!

எதற்கும் ஆசைப்படுவதா?

தேவையானவற்றுக்கு மட்டும் ஆசைப்படுவதா?

தேவையானதை வாங்குவதா? ஆசைப்படுவதை எல்லாம் வாங்கிக் குவிப்பதா? எது புத்திசாலித்தனம்?

# சிரிப்பு வெடி

சுமதி : குலுங்கி குலுங்கி சிரிக்க ஒரு ஜோக் சொல்லேனடி

பாமா:- ஏனடி என்ன நடந்தது

சுமதி:- மருந்தை குலுக்காமல் குடித்து விட்டேன்.

சி. மேரி ஜெனிற்றா, செ. பிரியா, கரவெட்டி

# உணர்வுகளை கையாளுதல்

இளைஞர் பக்கம்

குமார்ராஜா

பாடசாலைகளும், பெற்றோர்களும் மாணவர்களின் படிப்பு, பரீட்சை, மதிப்பெண்கள் போன்றவற்றில்தான் அதிகம் கவனம் செலுத்துகின்றனர். மாணவர்கள் எத்தகையை உணர்வுச் சிக்கல்களில் தவிக்கின்றனர் என்பது பற்றி அதிகமாக அக்கறை செலுத்துவதில்லை. உணர்வுச் சிக்கல்களை எவ்வாறு கையாளுவது என்று பயிற்சி அளிப்பதுமில்லை. தற்கொலை செய்துகொள்ளும் மாணவர்கள் மற்றும் தற்கொலை செய்யும் எண்ணத்துடன் வாடும் மாணவரின் எண்ணிக்கை பெருகி வருகிறது. எல்லா மாணவர்களுமே ஏதாவது ஓர் உணர்வுச் சிக்கலில் வாடுவது இயல்பு தான். அப்போது உணர்தல், ஏற்றுக்கொள்தல் மற்றும் கையாள்தல் என்னும் முப்பரி மாண அணுகுமுறையைக் கொண்டு அச்சிக்கலில் இருந்து மீள முடியும். மாணவர்களை அதிகம் பாதிக்கும் உணர்வுகள்: அச்சம், துயரம், கோபம்.

### 1.அச்சம்

ஏறக்குறைய 200 வகையான பயங்கள் உள்ளன. குறைந்த பட்ச பயம் உயிர் வாழவும், வெற்றி பெறவும் உதவும், பொதுவாக மாணவரிடம் காணப்படும் பயங்கள்:

1. ஆசிரியர்கள், தாடிவைத்த மனிதர்களைக் கண்டு பயம்.
2. இருட்டு, தண்ணீர், நெருப்பு, பாம்பு இவற்றைப் பார்த்தால் பயம்.
3. இறந்துவிடுவோமோ என்ற பயம்.
4. விபத்து பற்றிய பயம்.
5. தோல்வி பற்றிய பயம்.
6. தவறு செய்துவிடுவோமோ என்ற பயம்.
7. தவறு செய்துவிட்டேன் என்று ஒப்புக்கொள்ள பயம்(தண்டனை).
8. மற்றவர்கள் ஏளனம் செய்வார்கள் என்று எதையும் எடுத்துச் சொல்ல பயம்.
9. பிறரின் நட்பை இழந்துவிடுவோமோ என்ற பயம்.
10. பிறருடன் பகிர்ந்து கொள்ள பயம்.
11. பிறருக்குப் பொறுப்புகள், சுதந்திரம் கொடுக்க பயம்.
12. புதியனவற்றைச் சிந்திக்க, பேச, எழுத பயம்.

#### பயத்தைக் கையாளுதல்:

1. இந்தப் பயம் உண்மையா?(பலநேரங்களில் கற்பனைதான்!)
2. உண்மையாகஇருந்தாலும் என்ன பெரிய தீமை நடந்துவிடப் போகிறது?

இந்த இருகேள்விகளுக்கான அறிவுபூர்வமான விடை நமது பயத்தைப்போக்கும்.

* பயத்தை வெட்கமின்றி ஏற்றுக்கொள்க.
* பாசமுள்ள ஒருவரிடம் பகிர்ந்து கொள்க.
* பிறருடைய பய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளலாம்.
* செபமும் புனித நூல்களின் வசனங்களும் பயத்தைப்போக்கும்.
* என்ன செய்யலாம் என்று சிந்தித்துச் செயற்படுக.
* உணர்வுகளைக் கையாளப் பொறுமையும், நீண்ட காலமும் தேவை.

### 2. துயரம்

நெருக்கமானவர்கள், பொருள்கள், உடல் உறுப்புகளை இழந்தால் வருவது துயரம். சிலர் துயரிலிருந்து விரைவில் விடுதலை பெற்றுவிடுவார்கள், சிலருக்கு நீண்ட காலம் தேவைப் படும்.

1. என் வாழ்வில் ஏற்பட்ட மிகத் துயரமான நிகழ்வு எது?
2. அதிலிருந்து விடுபட எவ்வளவு காலம் தேவைப்பட்டது?
3. தற்போது என் மனதில் துயரம் எதுவும் இருக்கிறதா?

#### அறிதல், ஏற்றுக்கொள்ளல், கையாளுதல்

* துயரத்தை ஏற்றுக்கொள்க
* பாசம் நிறைந்த ஒருவருடன் பகிர்ந்து கொள்க.
* துயரம் வெளிப்படுத்தப்பட வேண்டும்: அழுகை, அதைப் பற்றிப் பேசுதல், சாப்பாடு, பொழுதுபோக்கு மறுத்தல் முதலியன.
* துயரிலிருந்து விடுபட முயற்சித்தல்: அறிவுபூர்வ அணுகுமுறை இழப்பிலும் நன்மை உண்டு.
* செபம், இறை வார்த்தை, இறை நம்பிக்கை துயரத்தைப் போக்குகிறது.
* உடல் உழைப்பு, உடற் பயிற்சி துயரத்தைக் குறைக்கும்.
* தனிமையைத் தவிர்க்க வேண்டும்.

### 3. கோபம்

#### அறிதல், ஏற்றுக்கொள்ளல், கையாளுதல்

* கோபத்தை அறிக, ஏற்றுகொள்க
* பாசம் நிறைந்த ஒருவருடன் பகிர்ந்து கொள்க
* கோபம் வெளிப்படுத்தப்பட வேண்டும் : சரியான நேரத்தில் (உடனடியாக அல்ல)
  சரியான அளவில்
  சரியான முறையில்
* வார்த்தைகளைக் கவனமுடன் கையாள்க, அமைதி காத்தல் மிகவும் நன்று.
* அறிவுபூர்வ அணுகுமுறை - இந்தக் கோபத்தால் என்ன பயன்? நான்தான் பாதிக்கப்படுகிறேன்.
* செபம், இறைவார்த்தை, இறை நம்பிக்கை கோபத்தைக் குறைக்கிறது.
* கோபம் வருவதற்கு முன்பே அறிதல், கோபப்பட மறுத்தல் நமக்கு வெற்றி, அவருக்குத் தோல்வி.

# காவியம் படைத்த கார்மேல் அன்னை

"கார்மேல் என்கையிலே ஆர்க்கும் அருளலை மேவுதம்மா, பாரினில் உன்வழி செல்கையிலே வராத சாந்தி வழியுதம்மா" என்ற பாடல் வரிகள் கார்மேல் அன்னையின் மகத்துவத்தை எடுத்தியம்புகின்றது. இனறு உலகெங்கிலுமுள்ள அனைத்து கார்மேல் சபையினராலும் ஆடி 16ம் திகதி கார்மேல் அன்னையின் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அன்று கார்மேல் அன்னையின் அரவணைப்பையும் பாதுகாப்பையும் உணர்ந்து துறவறக் குழுவினர் தம்மை அவ்வன்னைக்கு அர்ப்பணம் செய்தனர். முதல் கார்மேல் சபையினர் எனும் போது 12ம், 13ம் நூற்றாண்டுகளில் கார்மேல் மலையடியில் தமது, வனத்துறவு வாழ்க்கையை மேற் கொள்ள முடியாமல் போனபடியாலும் தமது வாழ்விற்கு அச்சுறுத்தல்கள் சூழ்ந்து இருந்தபடியாலும் அன்னையின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் சமர்ப்பித்து, செபித்து வந்தனர். 16ம் நூற்றாண்டில் அம்மடத்து துறவிகளின் முதல்வராயிருந்தவர்கள் அனைவரும் எல்லா ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றப்படுவர் என்ற உறுதி மொழியைக் கொடுத்து கார்மேல் சபையினருக்கு தமது அரவணைப்பையும் ஆதரவையும் வெளிப்படுத்தினார் அன்னை. அன்றிலிருந்து இன்று தொடக்கம் யூலை 16ம் திகதி கார்மேல் அன்னையின் திரு விழாவைக் கொண்டாடி வருகின்றார்கள். அதையொட்டியே கார்மேல் மலையில் தன்னை அறிமுகப்படுத்தியபடியால் கார்மேல அன்னையென கார்மேல்சபையினர் தம்மை அழைத்தனர். கார்மேல் சபையினர் கார்மேல் அன்னையின் அதிசிறந்த வழி காட்டியாகவும் துணையாகவும் கொண்டு பயணத்தை ஆரம்பித் தனர். சிறப்பாக ஆழ் தியானம், தியாகம் போன்ற பண்புகளால் தமது சபையை அலங்கரித்தனர். ஆழ்ந்தியானத்தின் வழி நாம் இறை இயேசுவின் நெருங்கிய நண்பர்கள் ஆகின்றோம் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர்கள் கார்மேல் சபையினர்.



ஒரு தாயின் அன்பும் அரவணைப்பும் எப்போதும் பிள்ளைக்கு இருக்கும் இதனையே இக்கட்டான சூழ்நிலையில் காரிருள் சூழ்ந்த வேளையில் கார்மேல் சபையினர் உணர்ந்தனர். வேதனை, மகிழ்ச்சி, இடரின் போது எம்மை அறியாமலே அம்மா என்று சொல்வதுண்டு. இது எம்முள் உறைந்திருக்கும் ஆழமான உணர்வு. தாயன்பின் மகத்துவத்தைப் பலரும் பல்வேறு வழிகளில் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். உயர்ந்தவர்கள் பலர் தாயன்பைப்பற்றி எழுதியுள்ளனர். ஆபிரகாம் லிங்கன் தாம் வாசித்த மாபெரும் நூல் தம் "தாய்தான்" என்று கூறியுள்ளார். உலகு சாா்ந்த வாழ்க்கையைக் கைவிட்டு ஆன்மீக வளர்ச்சிக்கு உழைத்த மாபெரும் புனிதரான அகுஸ்தினார் தமது மாற்றத்திற்கு தமது தாயான புனித மொனிக்கம்மாவின் கண்ணீரும், செபமும் தியாகமும், தாயின் இதய இரத்தத்தை பலியாகக் கொடுத்த தாயே காரணம் என்கிறார். படிப்பில் மேதையான தோமஸ் அல்வா எடிசன் தனது உயர்ச்சிக்கு தமது தாயின் ஊக்கமும் ஆர்வமும் தான் காரணம் என்றார். இவையெல்லாம் நோக்கின் ஒரு தாயின் அன்பு தனது பிள்ளையின் ஆபத்து வேளையிலும் உறுதுணையாக, பக்குவமாக வழி நடந்துதலிலே கவனத்தைக் கொடுக்கின்றது. தாய்க்கெல்லாம் உயர்ந்தவர்களாக துலங்கும் அன்னை மரியாள் என்றும் எம்மோடு பயணிக்கின்றாள் எந்நேரமும் அவளது அரவணைப்பும், பாதுகாப்பும் எம்மோடு இருக்கின்றது என்பதை கடந்த கால வரலாறுகள் எமக்கு பாடம் புகட்டுகின்றன. இவ்வாறு விண்ணகத்தந்தையின் பாதுகாப்பையே கார்மேல் சபையினர் சுவைத்தனர்.

ஜி. ஜெனவி
கொழும்பு - 13

இன்று உலகின் பல பாகங்களிலும் கார்மேல் அன்னையின் பெயரில் பல துறவற சபைகள் உருவாக்கப்பட்டு தமது சபைகளினூடாக கார்மேல் அன்னையின் மாண்பை உலகிற்கு எடுத்தியம்பி வருகின்றனர். இன்றும் அன்னை மரியாளின் அன்பையும் அரவணைப்பையும் அறியாமல் எம்மில் பலர் இருக்கின்றனர். அன்னை மரியாளின் மகத்துவத்தை உணர்ந்த, அனுபவித்த கார்டினல் நியூமன் அங்கிலிக்கன் சபையிலிருந்து கத்தோலிக்க திருச்சபைக்கு வந்த போது இவ்வாறு கூறினார். தாயில்லாத குடும்பத்திலிருந்து தாயுள்ள குடும்பத்திற்கு வரவிரும்பினேன். கத்தோலிக்க திருச்சபை தாயுள்ள குடும்பமாகும். இறை மகனை தம் திரு உதரத்தில் சுமந்து நடமாடும் நற்கருணைப் பேழை என்று அன்னை மரியாளின் அன்பை அனுபவரீதியாக பகிர்ந்து கொண்டார். இன்றும் எம்மத்தியில் எத்தனை பேர் அன்னை மரியாளின் அன்பை அனுபவிக்காமலும் அவவின் மேன்மையை உணராமலும் இருக்கின்றோம். எந்த வேளையிலும் சிறப்பாக இக்கட்டான சூழ்நிலையில் எம்மை கரம்பற்றி கைதூக்கி விடும் விடிவெள்ளியாக, வழி காட்டியாக அன்னை மரியாள் இருக்கின்றாள்.

இன்று உலகின் பல பாகங்களிலும் கார்மேல் அன்னையின் உத்தரியத்தை அணிபவர்கள் அதிகரித்து வருவதை நாம் காணலாம். அன்னை மரியாள் அன்று கார்மேல் சபையினருக்கு கொடுத்த உத்தரியத்தை அணிபவர்கள் என்றும் சகல ஆபத்துக்களிலிருந்தும், இறுதி மரணவேளைகளிலும் காப்பாற்றப்படுபவர் என்ற உண்மையை அதை அணிபவர்கள் பலரும் சான்று பகர்ந்துள்ளனர். இன்றும் எமது நாட்டில் சிறப்பாக முதல்நன்மை பெறும் சிறாகள் மத்தியில் கார்மேல் அன்னையின் உத்தரியம் கொடுக்கப்பட்டு சிறுவயதிலிருந்து உத்தரியத்தின் உன்னத தன்மையை உணர வைக்கின்றது எமது அன்னையாம் திருச்சபை. துன்ப வேளைகளில் துயர் துடைக்கும் தாயாக கார்மேல் அன்னை விளஙகினாள். இயேசுவின் உயிர்ப்பின் பின் பயந்து, நடுங்கி, தயங்கி இருந்த சீடர்கள் மத்தியில் விடிவிளக்காயிருந்து அவர்களுக்கு தைரியம் ஊட்டினாள் அன்னை மரியாள். இயேசுவின் தாயும் அங்கு இருந்தாள் (யோவா 2:11) என நற்செய்தியாளர் சான்று பகர்ந்துள்ளார். கானாவூர் திருமணவீட்டில் இரசம் தீர்ந்து விட்டது. இனி என்ன செய்வேன்? என்று அங்கலாய்த்த திருமண தம்பதியினரின் இழிவைப் போக்கி அவர்கள் துயர்துடைத்தாள் அன்னை மரியாள். அன்னை மரியாளைப் போல் இதயங்களை தொட்டவர் வேறு யாருமில்லை. இடுக்கண் உற்ற வேளைகளிளெல்லாம் இன்னல் போக்கும் இனியவளாக அன்னை திகழ்கின்றாள். இறை வார்த்தையை இதயத்தில் ஏற்று அதற்கு உருக் கொடுத்தவர் எம் விண்ணகத் தாய். இறை மகன் இயேசுவை கருவில் தாங்கிய நாள் முதல் வேதனைகளை தாங்கிய தாய் மரியாள் எம்மவரின் வேதனைகளையும் அறிந்து அதற்கு உதவிக்கரம் நீட்டி எம்மை வழிநடத்திக்கொண்டிருக்கிறாள். ஆபத்து வேளைகளிலும் தன்னை நோக்கி கூக்குரலிடும் பிள்ளைகளை அன்புக்கரம் நீட்டும் அன்புத்தாயாக இருக்கிறாள். அந்த அன்னையின் பாதுகாப்பும் பராமரிப்பும் இருள்போக்கி ஒளியேற்றும் சுடராக எம்வாழ்வில் திகழ வேண்டுவோம். சாதாரணமாக மனித இயல்பிலே துன்பங்களை, சவால்களை, பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாம் மண்ணுலகத்தாயின் அரவணைப்பில் சுகம் காண்கின்றோம். ஆனால் அந்த சுகம் சொர்க்கமாக அமையும். நாம் அன்னை மரியாளிடம் சரணடையும்போது தனது மகனின் வேதனையில் பயணித்த அன்னை மரியாள் அன்று தொடக்கம் எம்மோடு பயணிக்கிறாள். எம் நாளாந்த வாழ்வின் துன்பத்தில் கார்மேல் அன்னையின் பரிந்துரை உண்டு என்று விசுவசிப்போம்.

# குருநகர் ஆலய 150ஆவது ஜூபிலி ஆண்டில் அமதிகளின் ஆன்மீக புதுப்பித்தலின் அதிர்வுகள்

## "இயேசுவில் மீண்டும் எழுவோம்"

முதன்முறையாக ஒரே பங்கில் அமதிகள் மறையுரைஞர் குழுமம்
ஆன்மீகபுதுப்பித்தலுக்காக 80 நாட்கள் தரிப்பு .....
முதன்முறையாக அதிகளவு யாழ் அமதிகள் (31-அமதிகள்) ஒரே பங்கில் கால் பதிப்பு......

குருநகர் ஆலயப் பங்கின் 150வது ஆண்டை அர்த்தமுள்ளதாக நினைவு கூர பங்குத் தந்தை அருட்பணி. நேசராஜாவின் அழைப்பின் பேரில் யாழ்மாகண அமதிகளின் துணையோடு வவுனியா அமதிகள் மறையுரைஞர் குழு மம் குருநகர் பங்கில் கால் பதித்திருக்கிறது. 08.05.2011 அன்று கொடியேற்றத்தோடு ஆரம்பிக்கப்பட்டு காலைத் திருப்பலியின் போது அமதிகள் ஆன்மீக புதுப்பித்தலுக் காக பங்கை கையேற்றனர் 31 அமதிகளின் துணையோடு அமதி ஆதரவாளர்கள் வள வாளர்கள் துணையோடு இது முன்னெடுக்கப்படுகிறது.

### 1. இல்லத்தரிசிப்பு

மாலை 4.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை இல்லத்தரிசிப்புகள் நடைபெற்றன. பெற்றோரை பிள்ளைகளை நேருக்கு நேர் அமதிகள் எதிர் கொண்டு செவிமடுப்பதிலும் ஆலோசனைகள் வழங்குவதிலும் வழிகாட்டுவதிலும் முனைப்போடு ஈடுபட்டனர். இறைமக்களும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து காத்திருந்து ஒத்துழைப்பு நல்கினர். அல்லைப்பிட்டியில் குடியேற்றப்பட்டுள்ள குருநகர்ப்பங்கைச் சார்ந்த இறை மக்களின் வீடுகளும் தரிசிக்கப்பட்டன.



### இல்லத்தரிசிப்பில் ஈடுபட்ட அமதிகள்

1. அருட்பணி. தேவராஜா அமதி
2. அருட்பணி. ஜெயபாலன் அமதி
3. அருட்பணி. ஜோய் அமதி
4. அருட்ணி. விமல் அமதி
5. அருட்ணி. கிளேயர் அமதி
6. அருட்பணி. பிலிப் அமதி
7. அருட்பணி. சத்தியசீலன் அமதி
8. அருட்பணி. எட்மண்ட் மைக்கல் அமதி
9. அருட்பணி. பஸ்ரி அமதி
10. அருட்பணி. வென்சஸ்லொஸ் அமதி

11. அருட்பணி. பற்றிக் அமதி
12.. அருட்பணி. பீஸ்மன் அமதி
13. அருட்பணி. ஸ்ரனி அமதி
14. அருட்பணி. சில்வெஸ்ரர் அமதி
15. அருட்பணி. றெஜிக்குமார் அமதி
16. அருட்பணி. கியூபேட் அமதி
17. அருட்பணி. விஜேந்திரன் அமதி
18. அருட்பணி. ஜெனோ கரன்ஸ் அமதி
19. அருட்பணி. மதன்ராஜ் அமதி
20. அருட்பணி. லெபோன் அமதி
21. அருட்பணி. சந்திரபோஸ் அமதி

### 2. வழிபாடுகள்

(1) வெள்ளிதோறும் நற்கருணை ஆராதனைகள் குணமாக்கல் வழிபாடுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பங்கின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அமதிகளால் இதுவரை 8 நற்கருணை ஆராதனைகள் நடாத்தப்பட்டுள்ளன. இந்த நற்கருணை ஆராதனைகளில் அயல் பங்குளிலுமிருந்தும் அதிகமானோர் கலந்து பயன்பெற்றனர். இந்த நற்கருணை ஆராதணை நடாத்திய அமதிகளோடு எமக்கு உதவிய ஏனைய அமதிகள்



1. அருட்பணி. பீற்றர் அமதி
2. அருட்பணி. பொன்சியன் அமதி
3. அருட்பணி. ஸ்ரனி அன்ரனி அமதி

(11) ஞாயிறு, நாள் திருப்பலிகள

ஒவ்வொரு திருப்பலியிலும் ஆழமான மறையுரைகள் வழங்கப்பட்டு அர்த்தமுள்ளதாக திருப்பலிகள் ஒழுங்கு படுத்தப்பட்டன. திருப்பலி ஒப்புக்கொடுத்த அமதிகளோடு எமக்கு உதவிய ஏனைய அமதிகள்.

1. அருட்பணி. C.S. குரூஸ் அமதி
2. அருட்பணி. தயா பெரேரா அமதி
3. அருட்பணி. பிரவீன் மகேசன் அமதி

(111) பேரணிகள்

மரியாள் பேரணி, நற்கருணைப்பேரணிகளென இரு பேரணிகள் பிரமாண்டமான முறையிலே ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டது. வெவ்வேறு பாதைகளில் பங்கைச் சுற்றி வலம்வந்த இந்த பேரணிகளில் அதிகமானோர் கலந்து சிறப்பித்தனர். குருநகர் ஓர் எழுச்சிக்கோலம் பூண்டிருந்தது. வெவ் வேறு தரிப்பிடங்களில்



அமதிகள் மறைமுழக்கம் செய்தனர். இரு பேரணிகளிலும் மறையுரை வழங்கிய அமதிகள்...

1. அருட்பணி. ஸ்ரனி அன்ரனி அமதி
2. அருட்பணி. அன்புராசா அமதி
3. அருட்பணி. பொன்னையா அமதி
4 அருட்பணி. எட்மண்ட் மைக்கல் அமதி
5. அருட்பணி. ஜெயந்தன் அமதி
6. அருட்பணி. லெபோன் அமதி

(IV) வலயத்திருப்பலிகள்

குருநகர்ப் பங்கின் 16 வலயங்களும் எட்டாக பிரிக்கப்பட்டு ஒரே நேரத்தில் பங்கு முழுவதும் எட்டுத்திருப்பலிகள் இரு நாட்கள் நடைபெற்றன. மக்கள் ஆர்வமாக பங்கேற்றனர்.

(1) கருத்தமர்வுகள்

சிறுவர்கள், இளையோர், முதியோர், குடும்பங்கள் ஆசிரியர்களென வகைப்படுத்தப்பட்டு பல விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் நடாத்தப்படடன. அதிகமானோர் ஈடுபாட்டோடு கலந்து கொண்டதை காணக் கூடியதாயிருந்தது.



அமதிகள் வளவாளர் மையங்கள்:-

1 - 'அஞ்சலி அகம்' உளவளத் துணையகம், பருத்தித்துறை.
11 - 'சுகவாழ்வு' உள சமூக மேம்பாட்டுமையம், யாழ்ப்பாணம்.
111 - 'அமைதித்தென்றல்' உள வளத்துணையகம், முல்லைத்தீவு
IV - சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம், யாழ்ப்பாணம்.

வளவாளர்கள்:-

1 சகோ. யோகராசா (பேராசிரியர், களனி பல்கலைக் கழகம்)

2 திரு. க. பேர்ணாட் (பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி)

3 திரு. கே. ஸ்வர்ணராஜா (விரிவுரையாளர்-இணைப்பாளர், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி)

4 அருட்பணி. இரவிச்சந்திரன் (அன்பிய இளையோர் பொது நிலையினர் ஆணைய இயக்குனர்)

5 அருட்பணி. செபஸ்ரியன் அமதி (இயக்குனர், உளவளத் துணையகம், முல்லைத்தீவு)

(11) பாடசாலைகளில் விழிப்புணர்வு கருத்தமர்வுகள்

குருநகர் பங்கிலே அமைந்திருக்கின்ற சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் ஒவ்வொரு வியாழனும் காலையில் கருத்தமர்வும் ஒவ்வொரு வெள்ளியும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் ஒவ்வொரு புதனும் விழிப்புணர்வுக் கருத்தமர்வு அமதிகளால் நடாத்தப்பட்டது.



### 3. தேவ அழைத்தல் தினம்

ஆன்மீக புதுப்பித்தல் நாட்களில் ஓர் நாள் (15. 06. 2011) தேவ அழைத்தல் தினமாக நினைவு கூரப்பட்டது. காலையில் பெண்களுக்கும் மாலை ஆண்களுக்குமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. அதில் அதிகமான பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். வெவ்வேறு சபைகளைச் சார்ந்த துறவிகள்; குருக்கள் தங்களது பரப்புரைகளை மேற் கொண்டனர். கலந்து கொண்ட வெவ்வேறு சபையினர்



1 - கிளரேசியன் சபை
11 - செபமாலை தாசர் சபை
111 - அமதிகள் சபை
IV - மறைமாவட்ட குருக்கள்குழுமம்
V - நல்லாயன் கன்னியர் சபை
VI - திருக்குடும்ப கன்னியர் சபை
VII - திருச்சிலுவைக் கன்னியர் சபை
VIII - அன்பின் சகோதரிகள் சபை
IX - அப்போஸ்த்தலிக்க கார்மேல் சபை

### 4. ஆன்மீக விழிப் பூட்டல் நிகழ்வுகள்

ஒவ்வொரு வலயத்திலும் வினாக்கொத்துக்கள் அடங்கிய படிவங்கள் கொடுக்கப்பட்டு மீளப்பெறப்பட்டு ஆராயப்பட்டு முன்னேற வேண்டிய விடயங்கள் திரையில் காண்பிக்கப்பட்டு (Projector) சுட்டிக்காட்டப்பட்டன. தற்போதைய வலய ஆன்மீக நிலைகள் தெட்டத்தெளிவாக கொடுக்கப்பட்டன. கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோடு பல்கலைக்கழக மாணவர்கள், வெளிவாரிப் பட்டதாரி மாணவர்கள் ஊக்கம் கொடுக்கப்பட்டார்கள். விழிப்புணர்வு வீதி நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

### 5. இளையோர் தினம்

ஆன்மீக புதுப்பித்தல் காலங்களில் இவ் இளையோர் ஆண்டை முன்னிட்டு இளையோர் தினம் (10.07.2011) நினைவு கூரப்பட்டது. மாலை இசை நிகழ்வு, பட்டிமன்றம், வீதிநாடகங்கள், திரை ஒளிப்படங்களென விழா களைகட்டியது. அன்றையதினம் குருநகர்பங்கைச்சார்ந்த இளையோர் கழகங்கள், பல்கலைக் கழகமாணவர்கள் விபரம், பாடசாலை செல்வோர் விபரம் என்பன திரையில் காண்பிக்கப்பட்டன. மக்கள் முழு ஈடுபாட்டோடு கலந்து கொண்டனர்.

### 6. மறையறிவுப் போட்டிகள்

ஆன்மீகப் புதுப்பித்தலின் இன்னொரு பகுதியாக மறையறிவை வளர்க்கும் பல போட்டிகள் நடாத்தப்பட்டன. இவற்றுள் ஒவிய, வினாடிவினா, பாடல், பேச்சு, விவாத அரங்கு என பல போட்டிகள் அடங்கும். இதில் பெரும் பகுதியானோர் ஆர்வமாக கலந்து கொண்டனர். இந்த போட்டிகளுக்கு நடுவர்களாக பல அருட்சகோதரிகள், அருட்தந்தையர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### 7. யாழ் சிறைச் சாலை தரிசிப்பு

ஆன்மீக புதுப்பித்தல் அமதிகள் குழுமம் ஒரு நாளை குருநகர் ஆலயம் முன்பாக அமைந்திருக்கின்ற யாழ்சிறைச்சாலையை தரிசிப்பதற்காக ஒதுக்கியது. அங்கு பணியாற்றும் திருச்சிலுவைக்கன்னியர் சபை அருட்சகோதரிகளின் அழைப்பின் பேரில் யாழ்சிறைச்சாலையில் விழிப்புணர்வு புதுப்பித்தல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.



*இவ்வாறாக குருநகர்பங்கில் ஆன்மீக புதுப்பித்தல் சம்பந்தமாக பல நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. தொடர்ந்து 16ம் திகதி கொடியேற்றப்பட்டு நவநாள் மறையுரைகள் வழிபாடுகள் சிறப்புற ஒழுங்கமைக்கப்படுகின்றன. இந்த 150வது ஜுபிலி ஆண்டு திருவிழா என்றுமில்லாதவாறு வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.*

**அருட்பணி. விமல் அமதி**

## குடும்பம் ஒரு கதம்பம்



# பெற்றோர் பிள்ளைகள் நல்லுறவு

**எஸ். பிலிப்**

சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம். குடும்ப வாழ்வில் பலவிதமான சிக்ல்கள் நேர்கின்றன. அவற்றுள் உறவுச் சிக்கல்களும் உண்டு. குறிப்பாக, கணவன் - மனைவி உறவுக்கு அடுத்து சிக்கல்கள் நேரிடும் உறவு பெற்றோர் - பிள்ளைகளுடையது. பிள்ளைகள் வளர, வளர உறவின் பரிமாணங்கள் சிக்கல் அடைந்துகொண்டே போகும். சிக்கல்கள் நீங்கி, நல்லுறவு மலர, பெற்றோர் பின்வரும் செயல்பாடுகளை முயற்சிக்கலாம்.

### தொடுங்கள்

பெற்றோர் தம் குழந்தைகளை சிறு வயது முதலே, தொட்டு, அணைத்து வளர்த்து வந்தால் பிள்ளைகள் வளர்ந்த பின் பாசம் குறையாது. தாய் தன் குழந்தையை மார்போடு அணைத்து, முத்தமிட்டுக் கொஞ்சி, உறவாடுவதன் மூலம் ஆழமான பாசத்துக்கு அடிக்கல் நாட்டுகிறார். அதுபோல, தந்தையும் தன் பிள்ளைகளை மடியில் கிடத்தி, தோளில் தூக்கி, கரம் பிடித்து நடத்திச் சென்று பாதுகாப்பு உணர்வை ஊட்டுகிறார். சிறுவயதில் ஏற்படும் இந்த அனுபவம் ஆழ் மனதில் தங்கி, பிள்ளைகளுக்குப் பெற்றோரின் மேல் ஒரு பாசப் பற்றுதலை உண்டாக்குகிறது.

நமது கலாச்சாரத்தில், பிள்ளைகள் வளர்ந்த பிறகு, அவர்களைத் தொடுகின்ற பழக்கம் மெல்லக் குறைந்துவிடுகிறது. ஆனால், தட்டிக்கொடுத்தல், முத்தமிடுதல், கட்டி அணைத்தல், சிலுவை வரைதல் போன்றவை மூலம் தொடு வுணர்வைத் தொடர்வது நல்லது.

சில வீடுகளில் பெற்றோர் பிள்ளைகளைத் தொடுகின்ற ஒரே நேரம் அவர்களை அடிக்கும்போது தான். என்னே பரிதாபம்! இந்தப் பிள்ளைகள் பெற்றோரின் பாசத்தை எப்படி உணர்வார்கள்? பிள்ளைகளை அடிக்காமலே, வேறு விதமான தண்டனைகளை அவர்களுக்கு வழங்கலாம். ஒருநாள் முழுவதும் தொலைக் காட்சிப் பெட்டியை மூடிவைபபது மிகவும் சக்தி வாய்ந்த ஒரு தண்டனை. சில தாய்மார்கள் நாள் முழுதும் பிள்ளைகளுடன் பேசாமல் இருந்து விடுவர். பிள்ளைகளால் அதைத் தாங்க முடியாது. மன்னிப்பு கேட்டு, சரணாகதி அடைந்துவிடுவர்.

மேலை நாடுகளில் தொடுவுணர்வின் அருமையை நன்றாக உணர்ந்துள்ளனர். எனவே, அடிக்கடி அணைத்து, தட்டிக்கொடுத்து தங்கள் பாசத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். பெற்றோர் தம் பிள்ளைகளைத் தொட்டு அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற உளவியல் உண்மையை வலியுறுத்தும் பொருட்டு, சாலையோரங்களில் இன்று உங்கள் குழந்தையை அணைத்தீர்களா? என்று விளம் பரத்தட்டிகள் சில நகரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்தே அவர்களின் ஆர்வத்தைப் புரிந்து கொள்ளலாம். மேனாட்டாரிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நல்லவற்றில் இதுவும் ஒன்று.

### தவறு செய்ய அனுமதியுங்கள்

இல்லங்கள் பல்கலைக் கழகங்கள். அங்கே கற்றுத் தரப்படும் பாடங்களில் ஒன்று மன்னிப்பு. பிள்ளைகளுக்கு மன்னிப்பின் அனுபவத்தைப் பெற்றோர் தர வேண்டும். மன்னிக்கப்படும் அனுபவத்தைப் பெற்றோரிடம் பெறாவிட்டால், வேறு யாரிடம் பெறுவது?

சில வீடுகளில் தந்தையரின் தலைமைப் பண்பே அலாதி. இராணுவத்திற்குரிய கட்டுப்பாட்டில் மனைவியையும், பிள்ளைகளையும் வைத்திருப்பர். அதில் பெருமிதமும் கொள்வர். ஆனால், அந்த இல்லம் பரிதாபத்துக்குரியது.

பிள்ளைகள் செய்யும் தவறுகளைப் பெற்றோர் அனுமதித்து, மன்னித்து, அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த வீட்டில் யாரும் தவறே செய்யக் கூடாது என்று' கொள்கை முழக்கமிடுவது யதார்த்தமல்ல.

தவறு செய்யலாம். தவறு செய்தால் பரவாயில்லை. ஆனால், தவறை ஒத்துக்கொள்ள வேண்டும். மறுமுறை அத்தவறை செய்யாமல் இருக்க முயல வேண்டும் என்பதே பெற்றோர் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடிய அறிவுரையாக இருக்க வேண்டும்.

## கவிதைச் சரம்

# வயோதிபத்திலும் வாலிபம்...



வாலிப உள்ளம்
வயோதிபத்திலும் இருக்கும்
வரம் தாரும், இறைவா

வயதாகிவிட்டது என
வரப்புகளை நாங்களே
வரவழைத்துக் கொள்ளும்
வஞ்சகம் எமக்கு வேண்டாம்!

வரம்பு மீறி,
வயது கடந்த பின்னும்,
வலிமை பெறாத வாலிப
வாஞ்சையும் எமக்கு வேண்டாம்!

வயது தந்த பயிற்சிகளை
வயோதிபத்திலும் முயற்சிக்கும்
வண்ணமிகு
வரலாறு எமக்கு வேண்டும்.

வயது என்பது
வருடங்கள் அல்ல - மாறாக
வளமைகள் என்னும் சவால்மிகு
வற்புறுத்துதல் எமக்கு வேண்டும்!

வரும் தலைமுறைகள்
வாங்கிக் கொள்ளும்
வகைக்கு எம் அன்றாட
வாழ்வு விரிய
வரம் தாரும், இறைவா!

ஆனையூரான்

# அன்னையைப் போல்

பத்து மாதம் சுமந்து பெற்றவள் எம் தாய்
நாம் பிறக்குமுன்னே எம்மை அறிபவள்
எம் அன்னை கன்னிமரி

அன்னை என்றும் தந்தை என்றும்
பலர் உறவு சொன்னாலும்
நாம் அழைக்கும் போது
எம்மை பாதுகாப்பவர் எம் மரியா

மீட்பின் பாதையில் தனை இணைத்தவள் -
மீட்புக்காக தன் மகனை ஈன்றவள்
இறைவனின் அடிமை என்று இவளுடன் -
நானும் அடிமையாகின்றேன்
இறைவனின் அன்பிற்கு

சி. அன்ரனி சயந்தன்

# ஏய்! விலை வாசியே!

ஏற்றமுடன் ஏறிநிற்கும்
ஏமாத்து விலைவாசியே
ஏன் தான் உனக்கு இவ்வளவு கர்வம்?

உன்னை நம்பித்தானே
உலகு இருக்கு என்பது
உனக்குத் தெரியாதா?

ஏணியில் நீ ஏறிச்சென்றாயானால்
ஏழைகள் தான் ஏணிப்படிகளாய்
ஏங்கி ஏங்கி உனைப் பார்ப்பதா?

மூவேளை உணவு தேடிட
முந்நூறு கடை ஏறிவந்தாலும்
மூர்க்கனே உன் மனம் இரங்காதா?

இறங்கி வந்திடு விலைவாசியே
இரங்கி ஏழைகள் துயர் துடை
இவ்வுலகில் அவர்களும் உயிர் வாழ வேண்டும்


மிரட்டுகின்ற உன் வலையில்
மிரளாத ஆடுகளாய்
மிடுக்குடன் வாழ்ந்திட

வழிகாட்டும் இறைவா!
வழிதேடி அலைகின்ற
வறியவரின் கண்ணீர் துடையும் இறைவா!

சி. அன்ரனி சயந்தன்

# செபம்

- சேவியர் அந்தோனி -



அடர்ந்த காடு.
ஒத்தையடிப் பாதை.

கை வீசி நடந்து போனான் பக்தன் ஒருவன்.
கானகத்தில் கண்ட இயற்கைக் காட்சிகளைக் கண்டான்.

'என்னே கடவுளின் கை வண்ணம்...!'

கடவுளை மெச்சிக் கொண்டே போனான்.

எதிர்பாராத நேரத்தில் எதிரே....
ஒரு புலி பாய்ந்து வந்து நின்றது.
நாக்கால் மீசையை நீவி விட்டபடி
ருசியோடு அவனைப் பார்த்தது.

வகையாக மாட்டிக் கொண்டதை உணர்ந்தான்.
புலியைப் படைத்த கடவுளைச் சபித்தான்.
தப்பி ஓட வழியில்லை.

வேறு வழியின்றி மண்டியிட்டுச் செபம் செய்ய ஆரம்பித்தான்:
'கடவுளே...
என்னை காப்பாற்று....!
அது உம்மால் மட்டுமே கூடும்.'

கண்களை மூடி மனமுருக வேண்டினான்.
இறுதிச் செபம் சொன்னான்:

'கடவுளே....
உன் கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.'


செபத்தை முடித்து கண்களைத் திறந்து பார்த்தான்.
அங்கே....
அவனுக்கு எதிரே.....
புலியும் மண்டியிட்டு கண்களை மூடி
செபம் செய்து கொண்டிருந்தது.

புலியின் பக்தியைக் கண்டு வியந்து
மனதாரப் பாராட்டினான்.

'ஐந்தறிவு படைத்த புலியே...!
நீயும் கடவுளை வணங்குவதைப் பார்க்க
எவ்வளவு மகிழ்ச்சியாய்
இருக்கு தெரியுமா...?'

பக்தனை செல்லமாய் அதட்டியது புலி:

'உஷ்... தொந்தரவு செய்யாதே..!
நல்ல உணவு கிடைக்கும் போதெல்லாம்
இப்படித்தான் கடவுளுக்கு
நன்றி சொல்வேன்'



# "உன்னோடு நான்" சஞ்சிகை வெளியீடு

அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலய இளையோர் மன்றத்தினரின் கன்னி முயற்சியான ''உன்னோடு நான்''



எனனும் முதல் கையெழுத்துச் சஞ்சிகை கடந்த மாதம் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ் வெளியீட்டு விழாவில் அப்பிரதியின் ஆய்வுரையை மன்னார் மறைமாவட்ட காணிகள் ஆணைக் குழுத்தலைவர் அருட்பணி. சீமான் மரியதாசன் அடிகளார் வழங்கினார். இம்மன்றத்தின் இக்கையெழுத்துப் பிரதி பல கவிதைகளையும், மற்றும் சமயம் சார்ந்த கல்வி சார்ந்த கட்டுரைகளையும், சிறு கதைகள், பொது அறிவு விடயங்களையும் தாங்கி வருவது ஒரு சிறப்பான முயற்சி எனக் குறிப்பிட்டார். இப்பிரதியின் மதிபபீட்டு உரையை இளையோர் மன்றத்தின் இயக்குனர் அருட்பணி கு.யே. அன்ரனிபாலா அடிகளாரும், ஆசீயுரையை மன்றத்தின் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி மேரிஷயந்தி (அ.கா) அவர்களும் வழங்கினார்கள்.

முதல் பிரதியை பங்குத் தந்தை அருட்திரு. கு.யே. அன்ரனிபாலா அவர்கள் வெளியிட்டு வைக்க, அச்சுவேலி லங்கா மாதா மடத் தலைவி அருட்சகோதரி. தெரசில்டா (அ.கா) அவரகள் பெற்றுக் கொண்டார்.

மேற்படி எமது இளையோர் மன்றமானது 2011ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பங்குத் தந்தையின் வழிகாட்டுதலுடனும், அருட்சகோதரி ஷயந்தி (அ.கா) அவர்களது வழிகாட்டுதலிலும் இம்மன்றம் வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இம்மன்றம் ஆலய பிள்ளைகளின் மறைக்கல்வி, திருப்பாலத்து சபை, பீடப்பணியாளர் மன்றம், திருவழிபாடு தொடரபான செயற்பாடுகளை முன்னெடுப்பதும் விசேடவிதமாக திருவிழா தொடர்பான சகல விடயங்களிலும் ஆலய சபையினருடன் கைகோர்த்து செயற்பட்டு வருகின்றது.

# நிகழ்வுகளின் நிழல்கள்..





யாழ் ஆயர் இல்ல பணியாளர்களிற்கான புதிய விடுதி யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் அவரின் திருநாளாகிய யூலை 03 இல் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் குருக்கள், ஆயர் இல்ல பணியாளர்கள் சமூகம் கொடுத்திருந்தனர். இப் புதிய கட்டடமானது மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்பணி. அன்ரனிதாஸ் அடிகளாரின் முயற்சியிலும் நேரடிக் கண்காணிப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஆயர் இல்ல முகப்பு பகுதியில் அமைந்துள்ள இக்கட்டடம் ஓர் புதுப்பொலிவை கொடுத்துள்ளது.



நாரந்தனைப் பங்கின் புதிய பங்கு மனையை யாழ். ஆயர் கடந்த வாரம் திறந்து வைத்தார். பங்குத் தந்தை அருட்பணி. அருள்தாசின் முயற்சியில் ஆயரினதும் பங்கு மக்களினதும் நிதியுதவியுடன் இப் புதிய பங்கு மனை அமைக்கப்பட்டுள்ளது. இத் திறப்பு விழாவில் மண்ணின் மைந்தனும் ஆயரின் செயலருமாகிய விஜின்ரேஸ் அடிகளும் கூட இருந்தார்.



யாழ் ஆயரின் பெயர் கொண்ட திருநாளில் ஆயர் அவர்கள் யாழ் மறைமாவட்ட மாணவர்களுக்கான திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். அன்று ஆயர் அவர்கள் யாழ் சென் ஜேம்ஸ் வித்தியாலய மாணவிகளின் நாட்டிய நடன வரவேற்புடன் யாழ் பேராலயம் அழைத்து வரப்படுகின்றார்.


## 17 ஆண்டுகளுக்குப்பின் கிளாலி புனித. யாகப்பர் யாத்திரைஸ்தல திருவிழா



கிளாலி புனித. யாகப்பர் யாத்திரைஸ்தல விழா, 17 ஆண்டுகளுக்கு பின்னர் இவ்வருடம் கொண்டாடப்படவுள்ளது. ஆலயம் பெருமளவில் சேதமடைந்து இருந்த போதிலும் தற்போது ஓரளவு புனரமைக்கப்பட்டுள்ளது. திருவிழாவிற்கான அனைத்து ஒழுங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.


29-07-2011 வெள்ளி மாலை 5.00 மணி
நற்கருணை விழா
30-07-2011 சனி காலை 7.30 மணி
திருவிழா திருப்பலி

இறையருள் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

அருட்தந்தை ம. பத்திநாதர்
பரிபாலகர்.

Add-54/11

## விண்ணக வாழ்வில் 7ம் ஆண்டு நிறைவு



அன்னை மடியில்
12-06-1932

இறைவன் மடியில்
13-07-2004

நற்குருவாய்
நல் ஆசானாய்
நல் வழிகாட்டியாய்
ஊர் வாழ உழைத்த
உங்கள் வாழ்வை
நினைக்கின்றோம்...
செபிக்கின்றோம்....

அமரர்
அருட்பணி அன்ரன் இராஜநாயகம்

மறைக்கல்வி நடுநிலையம்,
யாழ்ப்பாணம்.

அருட்பணி அன்ரன் ஜோர்ஜ்

Add 56/11

## 1st Death Anniversary and 50th Jubilee

On Earth
17.12.1940

Entered to Glory
15.06.2011



To Serve
08.09.1961

Late Rev. Sr. Anne Mary Anthony (Holy Cross)

"For truly the son of man did not come to have servants but to be a servant " *(Mark 10:45)*

Dear Lord Jesus Christ
Grant her Eternal Rest

Fondly remembered and sadly missed by your ever loving relations and loved ones

St. James Lane,
Ilavalai, Jaffna.

Add-55/11


## கட்டுரைப் போட்டியில் 1ம் இடம்



சர்வதேச லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் லயன்ஸ் கழகம் தெகிவளை கிளையினால் அகில இலங்கை பாடசாலைகளிடையே நடாதப்பட்ட "போதைப் பொருள் பாவனையை எப்படித் தடுக்கலாம்" என்ற ஆங்கில மொழி மூலமான கட்டுரைப் போட்டியில் யாழ் பத்திரிசியார் கல்லூரி மாணவன் மரியநாயகம் சஜீவன் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் பாணடியந்தாழ்வு பங்கைச் சேர்ந்தவரும் யாழ் டொன் பொஸ்கோ வித்தியாலய பழைய மாணவரும் ஆவார்.

## கனிவான கவனத்திற்கு

அன்புடைய காவலன் வாசகர்களே,

பாதுகாவலன் பத்திரிகையில் மீண்டும் சிறுவர், இளையோர், குடும்பம் ஆகிய பகுதிகளை தனிப்பகுதிகளாக ஆரம்பித்துள்ளோம். இப்பகுதிகளிற்கான ஆக்கங்களை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். எனவே உங்கள் தரமான ஆக்கங்களை எமக்கு நேரகாலத்தோடு அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். உங்கள் ஆற்றல்கள் திறமைகளை பாதுகாவலன் பத்திரிகைக் களத்தில் பகிர்ந்து வளருங்கள்.

ஆசிரியர்

# நிரந்தரத் தீர்வைக் காணும் நிர்ப்பந்தத்திற்குள் இன்று இலங்கை

**- இந்திய பிரதித்தூதுவர் ஆயர் இல்லத்தில் தெரிவிப்பு -**



இனப்பிரச்சனைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய கட்டாய நிலைக்குள் இலங்கை அரசு தள்ளபபட்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது. கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் பிரதித் தூதுவர் மிஸ்ரா யாழ். சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான பிரஜைகள் குழுவை யாழ். ஆயர் இல்லத்தில் கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடினார். 'இலங்கை அரசு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு நியாயமானதும் நீதியானதுமான அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா தனது முழுப் பங்கையும் வழங்கும்' என்று அப்போது அவர் கூறினார்.

''இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பாக இந்தியாவின் மிக மூத்த இராஜதந்திரியான பார்த்த சாரதி முதல் இன்றைய வெளி விவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வரை பலரும் வந்து போகின்றனர். உடன்படிக்கைகளையும், கூட்டறிக்கைகளையும் வெளியிடுகின்றனர். அவையெல்லாம் எழுத்திலும் ஊடகங்களிலும் மட்டுமே காணப்படுகின்றன. எவையுமே செயல் உருப்பெறவில்லை. இந்த நிலையில் இந்தியா இப்போதாவது தனது உணர்வு பூர்வமான பங்களிப்பை வழங்கி, நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும்" என சமாதானத்துக்கான பிரஜைகள் குழுவினர் கோரிக்கை ஒன்றை முன் வைத்தனர்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான பிரஜைகள் குழு உறுப்பினர்களான நல்லை ஆதீனக் குரு முதல்வர், ஜெயசேகரம் அடிகளார், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சு. பரமநாதன், எஸ். பொன்னம்பலம், எஸ். ராஜாராம், கே. பூரணசந்திரன் உள்ளிட்ட பிரதி நிதிகளுடன் இந்தியத் தூதரக அதிகாரி வே. மகாலிங்கமும் கலந்து கொண்டார்.

# கத்தோலிக்கக் கோவில் கட்டுவதற்கு அரசு மறுப்பு

குருநாகல் மறை மாவட்டத்தில் ஒரு புதிய கோவில் கட்டுவதற்கு அனுமதி கொடுக்க மறுததுள்ளது அரசு. ஹென்டியாகல எனுமிடத்தில் கோவில் ஒன்றைக் கட்டுவதற்கு ஆயர் ஹரலட அன்ரனி பெரேரா எடுத்த முயற்சிகளுக்கு அப்பகுதியின் புத்தமதத்தினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால் அதைக் காரணமாகக் காட்டி அரசும் அனுமதி கொடுக்க மறுததுள்ளது. அப்பகுதியின 100க்கும மேறபட்ட கத்தோலிக்க குடும்பங்களுக்கான வழிபாட்டுத் தலமாக 1997ம் ஆண்டு கட்டப்பட்ட தற்காலிக் கோவில் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதைத் தொடர்ந்து தற்போது புதிய கோவில் கட்டுவதற்கென முன் வைக்கப்பட்ட அனுமதி அரசால் மறுக்கப்பட்டள்ளது என வத்திக்கான் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

# தமிழை உலக வரைபடத்தில் பொறித்தவர் தனிநாயகம் அடிகளார்

**- தமிழ் நேசன் அடிகள் -**

"புலவர்களுக்குள்ளும் பண்டிதர்களுக்குள்ளும் முடங்கிக் கிடந்த தமிழை தனிநாயகம் அடிகளார் உலக அரங்கில் ஏற்றி வைத்தார். தமிழை உலக வரைபடத்தில் பொறித்தவர் தனிநாயகம் அடிகளார். தமிழ் தெரியாத அறிஞர்களும் தமிழை ஆய்வு செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டைத் தோற்றுவித்தவர் அவர். தமிழின் சிறப்பை எடுத்துச் சொல்ல பல வெளிநாட்டுப் பயணங்களை அவர் மேற்கொண்டார். அதனால் தான் அவரை 'தமிழ்த்தூது' (Ambassador of Tamil) என்று தமிழ் உலகம் அழைத்து மகிழ்கின்றது. ஒரு பல்கலைக் கழகம் செய்யவேண்டிய பாரிய தமிழ்ப்பணியைத் தனி ஒருவராக நின்று செய்தார்."

இவ்வாறு யூலை மாதம் 8ந் திகதி கொழும்பு பொறளை வனாத்தமுல்லை கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு தமிழ்த்தூது தனி நாயகம் அடிகளாரின் பெயர் சூட்டும் விழாவில் கலநது கொண்டு 'தனிநாயகம அடிகளாரின் தமிழ் பணிகள்' என்னும் தலைப்பில் உரையாற்றிய அருட்பணி தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவரும், மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத் தொடர்புகள் அருட்பணி மையத்தின் இயக்குநரும், 'மன்னா' என்ற மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகையின் ஆசிரியருமாகிய அருட்பணி தமிழ் நேசன் அடிகளார் இந்நிகழ்வில் தனிநாயக அடிகளாரின் தமிழ்ப் பணிகளை எடுத்துரைத்து மேலும் கூறியதாவது,

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் உலகப் புகழ் பெற்ற தமிழ்ப் பேரறிஞர். ஒரு கத்தோலிக்க குரு. நம் ஈழநாடு பெற்றுத்தந்த தன்னிகரில்லாத் தமிழ் மகன். "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் பெருமையில்லை திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்." என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்கியவர், உலக அரங்கில் தமிழுக்கு இடம்பெற்றுத்தந்த ஒப்பற்ற தமிழ்த் தொண்டர். என தெரிவித்தார்

# உயர்தர பரீட்சை முன் ஆயத்த கருத்தரங்கு

## நூற்றுக்கு மேற்பட்டோர் பங்குபற்றினர்



இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தர பரீட்சையில் கிறீஸ்தவம்/ கிறீஸ்தவ நாகரீகம் பாடங்களில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்காக முழுநாள் முன்னாயத்தக் கருத்தரங்கு கடந்த வாரம் யாழ். மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

இக்கருத்தமர்வில் கருத்துரைகளைப் பேராசிரியர் ஞா. பிலேந்திரன் அடிகள், திரு. வசந்தன், திருமதி. சுனித்தா அவர்களும் வழங்கினர்.

நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய இக் கருத்தரங்கில் பயன்பெற்ற ஓர் மாணவி பாதுகாவலனுக்கு தெரிவிக்கையில் பரீட்சைக்கு முன் ஓர் சிறந்த மீட்டலாகவும், எதை எதைத் தெரிவு செய்து படிக்க வேண்டும் என்பதையும், எபபடி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்ள முடிநததாகக் கூறினார்.

2009ம் ஆண்டு தொடக்கம் க.பொ.த உயர்தரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கிறீஸ்தவ நாகரீகப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் 2011ம் ஆண்டில் முதல்முறையாகப் பரீட்சை நடைபெற உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கிறீஸ்தவ நாகரீகப் பாடத்திற்கான மாதிரி வினாக்கொத்து நூல் ஒன்றும் யாழ். மறைக் கல்வி நடுநிலையத்தினரால் வெளியிடப்பட்டுள்ளதாக மறை கல்வி நடுநிலைய இயக்குநர் தந்தை எஸ். ஏ. ஜோர்ச் அடிகள் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

## சின்னமடு மாதா யாத்திரைத்தல திருவிழா 2011



27-07-2011 கொடியேற்றம் மாலை 4.00 மணி
04-08-2011 நற்கருணை விழா மாலை 4.30 மணி
05-08-2011 முதல்த்திருப்பலி காலை 6.30 மணி
பெருவிழாத்திருப்பலி காலை 8.00 மணி

பயணிகள் பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தங்குமிட வசதிகள் உண்டு.

**சின்னமடு அன்னையின் அருள்பெற வரவேற்கிறோம்.**

அருட்பணி. யே.அ.அருள்தாசன்
பரிபாலகர்

## முழு மனித பண்பாட்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கின்றன. பெற்றோர் பிள்ளைகளை ஊக்கப்படுத்திக் கற்க வைப்பதை விடுத்து, குடும்ப கௌரவத்தை அடிப் படையாகக் கொண்டு மாணவர்கள் மீது தமது விருப்பு வெறுப்புக்களைத் திணிப்பது தவறாகின்றது. அவர்கள் சுயமாகத் தமது துறையை தெரிவு செய்து படிக்க ஊக்கப்படுத்துவதுடன், எம் இளைய சமூகத்தின் முழு மனித பண்பாட்டு உருவாக்கத்தில் பெற்றோரும், ஆசிரியரும் இன்று பெரிதும் துணை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கல்லூரியின் அதிபர் தந்தை அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அடிகள் 2010ம ஆண்டிற்கான கல்லூரியின் செயற்பாட்டு அறிக்கையைச் சமர்பித்தார். இப் பரிசு வழங்கும் விழாவில் கல்லூரியின் முகாமையாளரும், யாழ் ஆயருமாகிய மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது ஆசியுரையை வழங்கினார். இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திரு. மகேந்திரன் பொன்ராஜா (கொழும்பு பழைய மாணவர் சஙக முன்னை நாள் தலைவர்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

இறுதியாகக் கடந்த கல்வி ஆண்டிற் சிறப்புற்ற மாணவர்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினரும், சிறப்பு விருந்தினரும் வழங்கிக் கௌரவித்தனர்.

## பொருளாதாரப் பிரச்சனைக்குத் தீர்வு

உலகின் பொருளாதாரப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமெனில், உபகரணங்கள் அல்ல மாறாக உபகரணங்களைப் பயன்படுத்துபவர்கள் மாறவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார் வத்திக்கான் வங்கியின் இயக்குனர் கோத்தி தெதஸ்கி.

திருப்பீடத்திற்கான இத்தாலிய தூதரகத்தில் பொருளாதார நெருக்கடியின் விளைவுகள் என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய தெதஸ்கி, பொருளாதாரம் என்பது ஓர் உபகரணமே, அந்த உபகரணத்தை தவறாகப் பயன்படுத்துவது நாமே என உரைத்ததுடன்; மனித வாழ்வு, மற்றும் மாண்பு சரியாக மதிக்கப்படாமையே நெருக்கடிகளுக்கான மூல காரணம் என்பதையும் சுட்டிக்காட்டினார். திருத்தந்தையின் "கியுமானே வீற்றே" என்ற ஏட்டிலிருந்து உதாரணங்களையும் முன் வைத்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2011 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம்